# சாதனங்கள் அனுமதி முறைமை (ECS)

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

# தனிப்பட்ட பயனர்களுக்கான பயனர் கையேடு

## உள்ளடக்க அட்டவணை

அறிமுகம் ........ 1
தனிப்பட்ட பயனர் பதிவு செயல்முறை ........ 1
இணையத்தளத்தில் உள்நுழைதல் ........ 6
தனிப்பட்ட பயனர் அறிமுகப் படிவம் ........ 6
தனிப்பட்ட முகப்பு பலகை கண்ணோட்டம் ........ 7
சாதனப் பதிவு செயல்முறை ........ 8
மறு-ஏற்றுமதி விண்ணப்ப செயல்முறை ........ 16

## 1. அறிமுகம்

இக் கையேடு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் **(TRCSL)** இணையவழி தளத்தில் தனிப்பட்ட பயனர்கள், தங்களது கணக்குகளைப் பதிவு செய்து நிர்வகித்தல் மற்றும் விண்ணப்பங்களின் நிலையைப் கண்காணித்தல் ஆகிய அத்தியாவசிய செயல்முறைகளுக்கு வழிகாட்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பயனர்கள் தங்களது செயல்பாடுகளின் போது இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் (TRCSL) விதிமுறைகளுக்கு முழுமையாக இணங்குவதை உறுதி செய்ய வேண்டும். இதில், சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) பதிவு செய்யப்பட்ட சாதனங்கள் மற்றும் குறுந்தூர (SRD) சாதனங்களை மட்டுமே கொள்வனவு செய்து பயன்படுத்துதல், வர்த்தகம் செய்தல் என்பது முக்கியமான நடைமுறையாகும். இதன் மூலம், அனைத்து தொலைத்தொடர்பு சாதனங்களும் தேசிய விதிமுறைகளுக்கு இணங்குவதையும், பாதுகாப்பு மற்றும் வலையமைப்பின் ஒருமைப்பாடு பேணப்படுவதையும் உறுதி செய்ய முடியும்.

இந்தப் பயனர் கையேடு, மேற்கண்ட தேவைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் உடனான செயல்பாடுகளைச் சீராக மேற்கொள்வதற்கும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தனிப்பட்ட பயனர் தளத்தை எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பான படிப்படியான வழிகாட்டுதலை வழங்குகின்றது.

## 2. தனிப்பட்ட பயனர் பதிவு செயல்முறை

- உங்களுக்கு விருப்பமான இணைய உலாவியைத் திறக்கவும். (சிறந்த பயன்பாட்டு அனுபவத்திற்காக **Google Chrome** பயன்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.)
- வழங்கப்பட்டுள்ள இணைப்பை கிளிக் செய்யவும்: **https://ecs.trc.gov.lk/signup/individual**



Vendor Login
Note: Vendor License holders shall not log in as Individual or Corporate user.
Email
Password
Log In
Forgot password?
Login as Individual User
Login as Cooperate User
https://ecs.trc.gov.lk/login-individual

- புதிய பயனர்கள் உள்நுழைவதற்கு முன் ஒரு கணக்கை உருவாக்க வேண்டும்.
- அதற்கு முன், தனிப்பட்ட பயனர் கணக்கை உருவாக்க “தனிப்பட்ட பயனராக உள்நுழையவும் - Login as Individual User” என்பதைக் கிளிக் செய்யவும்.




- புதிய பயனர் “கணக்கை உருவாக்கவும் - Create an Account” பொத்தானைக் கிளிக் செய்யும் போது,



## புதிய கணக்கு உருவாக்கும் செயல்முறை

படிமுறை 1: தனிப்பட்ட பயனர் பதிவு படிவத்தைப் பூர்த்தி செய்தல்

- **மின்னஞ்சல்** : உங்கள் செல்லுபடியாகும் மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும்
- **கடவுச்சொல் (Password):** பாதுகாப்பான கடவுச்சொல்லை உள்ளிடவும்.
- **கடவுச்சொல்லை மீண்டும் உள்ளிடுக** : கடவுச்சொல்லை மீண்டும் உள்ளிட்டு உறுதிப்படுத்தவும்.
- பின்னர், பயனர் வகையாக **"தனிப்பட்ட பயனர் - Individual User"** என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.
- நீல நிற **"மின்னஞ்சலை உறுதிப்படுத்தவும் - Confirm Email"** பொத்தானைக் கிளிக் செய்யவும். இதன் மூலம் உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு சரிபார்ப்புக் குறியீடு (**Verification Code**) அனுப்பப்படும்.



படிமுறை 2: மின்னஞ்சல் சரிபார்த்தல்

- “மின்னஞ்சலை உறுதிப்படுத்தவும் - **Confirm Email”** என்பதைக் கிளிக் செய்த பின்னர், பின்வருமாறு பச்சை நிற வெற்றிச் செய்தி தோன்றும் : “நீங்கள் வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு சரிபார்ப்புக் குறியீடு வெற்றிகரமாக அனுப்பப்பட்டுள்ளது. தயவுசெய்து உங்கள் மின்னஞ்சலைச் சரிபார்க்கவும்”
- உங்கள் மின்னஞ்சலைச் சரிபார்க்கவும் : உங்கள் **Inbox**-ஐத் திறந்து, **TRCSL** இலிருந்து வந்த மின்னஞ்சலைக் பார்க்கவும்.




படிமுறை 3: சரிபார்ப்புக் குறியீடு (Verification Code)

- குறியீட்டை உள்ளிடுதல்: தளத்திற்கு (portal) திரும்பி, “உறுதிப்படுத்தல் குறியீடு - Confirmation Code” புலத்தில் 6 இலக்கக் குறியீட்டை உள்ளிடவும்.
- கணக்கை உருவாக்குதல்: நீல நிற “கணக்கை உருவாக்கவும் - Create Account” பொத்தானைக் கிளிக் செய்யவும்.


Individual User Registration
Note: Not for Vendor License holders.
Verification code sent successfully to sampleindividual1@outlook.com.
Please check your mail
Email-:
sampleindividual1@outlook.com
Please proceed
Password:
Re-Enter Password-:
Confirm Email
Confirmation Code-:
469042
Create Account
Cancel


Individual User Registration
Note: Not for Vendor License holders.
Email-:
Email
Password:
Password
Re-Enter Password-:
Re-Enter Password
Confirm Email
Confirmation Code-:
Confirmation code
Create Account
Cancel
Account created successfully. Please log in.
3
Redirecting to login...
Go to Login Now

## 3 . இணையத்தளத்தில் உள்நுழைதல்

- மின்னஞ்சல் (Email): பதிவுசெய்யப்பட்ட உங்களுடைய மின்னஞ்சல் முகவரியை உள்ளிடவும்.
- கடவுச்சொல் (Password): உங்கள் கடவுச்சொல்லை உள்ளிடவும்.
- சமர்ப்பித்தல் (Submit): நீல நிற "உள்நுழையவும் - Log In" பொத்தானைக் கிளிக் செய்யவும்.




## 4 . தனிப்பட்ட பயனர் அறிமுகப் படிவம்.

படிமுறை 1: விண்ணப்பத்தை அணுகுதல்

பயனர் பதிவு செயல்முறையை நிறைவு செய்வதற்கு, தனிப்பட்ட பயனர் அறிமுகப் படிவத்தை **(Individual User Onboarding Form)** பூர்த்தி செய்யவும்.

- பக்கப்பட்டியில் (Sidebar) உள்ள "தனிப்பட்ட பயனர் உரிம விண்ணப்பம்" என்பதைக் கிளிக் செய்யவும்.
- புதிய பயனர்களுக்காக, பக்கம் முதலில் வெற்றிடமாக உள்ள படிவத்துடன் திறக்கப்படும்.

படிமுறை 2: தேவையான விபரங்களைப் பூர்த்தி செய்தல்



## 5 . தனிப்பட்ட முகப்பு பலகை கண்ணோட்டம்

வெற்றிகரமாக உள்நுழைந்த பின்னர், பின்வரும் பிரிவுகளைக் கொண்ட பிரதான முகப்பு பலகையை (Main Dashboard) நீங்கள் காணலாம்.

- மேல் பட்டி (Top Bar): TRCSL சின்னம், பயனர் சுயவிவரக் கீழிறங்கும் பட்டியல்
- பக்கப்பட்டி பட்டியல் Sidebar Menu:
    - முகப்பு பலகை
    - தனிப்பட்ட பயனர் உரிம விண்ணப்பம்
    - மாதிரி அங்கீகாரம்
    - சாதனப் பதிவு
    - மறு ஏற்றுமதி
    - பயனர் சுயவிவரம்



## 6. சாதனப் பதிவு

### 6.1. தடுத்து வைக்கப்பட்ட சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) சாதனங்கள்

படிமுறை 1: சாதனப் பதிவு பிரிவை அணுகுதல்

- இடதுபுற வழிசெலுத்தல் பட்டியலில் உள்ள “சாதனப் பதிவு - Device Registration” பிரிவிற்குச் செல்லவும்.
  - பின்னர், சாதனப் பதிவு ->> தடுத்து வைக்கப்பட்ட சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் சாதனங்கள் பகுதிக்குச் செல்லவும்.




- “தடுத்து வைக்கப்பட்ட சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) சாதனங்கள் - **Detained IMEI Devices**” என்பதைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைக்குள் நீங்கள் செல்வீர்கள்.
- மேலே காட்டப்பட்டுள்ள பக்கத்தில் “புதியதைச் சேர்க்கவும் - **Add New**” பொத்தானைக் கிளிக் செய்யவும்.
- பயனர் விபரங்கள் மற்றும் விலைப்பட்டியல் (**Invoice**) விபரங்களுடன் விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்யவும்.
- “புதியதைச் சேர்க்கவும் - **Add New**” என்பதைக் கிளிக் செய்தவுடன், கீழே காட்டப்பட்டுள்ள திரைக்கு நீங்கள் செல்வீர்கள்.


TRCSL
Sample Individual
Dashboard
Individual Clearance Application
Type Approval
Device Registration
Detained IMEI Devices
Detained Serial Devices
Non Detained IMEI Devices
Re-Export
User Profile
Help
Dashboard / Device Registration
Detained IMEI Device Registration.
Add New
You can have only 5 device registration for this year.
Registration Request
Show 10 entries
Search:
Request Id
Requested Date
IMEI Upload Status
Approval Status
Action
No data available in table
Showing 0 to 0 of 0 entries
Previous
Next
The completion date is subject to change based on conditions outside the scope of TRCSL.

படிமுறை 2: தனிப்பட்ட பயன்பாட்டிற்கான வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணம் (RTTE) சுங்க அனுமதி விண்ணப்பம்




- “விண்ணப்ப விபரங்கள் (Application Details)” பிரிவின் கீழ், தேவையான விபரங்களை உள்ளிட வேண்டும்.



- கீழ்நோக்கி சென்று, "வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணம் (RTTE) விவரங்கள் (Details of RTTE)" பிரிவின் கீழ் உபகரண விபரங்களைச் சேர்க்க வேண்டும். காட்டப்பட்டுள்ள "உபகரணத்தைச் சேர்க்கவும் - Add Equipment" பொத்தானைக் கிளிக் செய்யவும். பின்னர், கீழே காட்டப்பட்டுள்ள சாளரத்திற்குள் (window) நீங்கள் செல்வீர்கள்.
- பின்னர், சரியான விபரங்களைப் பூர்த்தி செய்யவும். பல சர்வதேச அலைபேசி உபகரண அடையாள (IMEI) எண்களைச் சேர்க்க விரும்பினால், "+" குறியீட்டைக் கிளிக் செய்யவும்.




- விபரங்களைப் பூர்த்தி செய்த பின்னர், அவற்றைச் சேர்ப்பதற்கு கீழே காட்டப்பட்டுள்ள "சேர்க்கவும் - Add" பொத்தானைக் கிளிக் செய்யவும்.



- விபரங்களைச் சேர்த்த பின்னர், அவை கீழே காட்டப்பட்டுள்ளபடி காண்பிக்கப்படும்.




- பின்னர், “பிற விபரங்கள் - Other Detail” பிரிவின் கீழும் “உறுதிமொழி - Declaration” பிரிவின் கீழும் தேவையான விபரங்களைப் பூர்த்தி செய்யவும்.

- பின்னர், “உறுதிமொழி - Declaration” பிரிவின் கீழ், “மேற்கூறிய உறுதிமொழியை நான் இதன் மூலம் ஏற்றுக்கொள்கிறேன்” என்பதற்கு அருகிலுள்ள பெட்டியைத் தேர்ந்தெடுக்கவும். தற்போதைய திகதி புலத்தில் தானாகவே தோன்றும்.



- பின்னர், “துணை ஆவணங்கள் - **Supporting Documentations**” பிரிவின் கீழ் துணை ஆவணங்களைச் சேர்க்கவும்.







- குறிப்பிட்டுள்ளபடி, பல துணை ஆவணங்களைச் சேர்க்க வேண்டுமெனில், அவற்றைத் தனித்தனியாகத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்த்து, ஒரே நேரத்தில் அனைத்து ஆவணங்களையும் தேர்ந்தெடுக்கவும்.



- பின்னர், கோப்பைச் சேர்த்தவுடன், “சமர்ப்பிக்கவும் - Submit” பொத்தானைக் கிளிக் செய்து கோரிக்கையைச் சமர்ப்பிக்கவும். அதன் பின்னர், சமர்ப்பிப்பை உறுதிப்படுத்தும் சாளரம் தோன்றும். அதில் “ஆம் - Yes” என்பதைக் கிளிக் செய்து உறுதிப்படுத்தவும்.




- வெற்றிகரமாகச் சமர்ப்பித்த பின்னர், பின்வரும் உறுதிப்படுத்தல் பக்கம் காண்பிக்கப்படும்.
- “உங்கள் நிலையைச் சரிபார்க்கவும் - Check your Status” என்பதைக் கிளிக் செய்தவுடன் அல்லது மீண்டும் “தடுத்து வைக்கப்பட்ட சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) சாதனங்கள் - Detained IMEI Devices” பகுதிக்குச் சென்றவுடன், உங்கள் கோரிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளபடி காண்பிக்கப்படும்.



- கோரிக்கை வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், அங்கீகார நிலை - ஆனது "மதிப்பாய்வில் உள்ளது - In Review" எனக் காண்பிக்கப்படும். கோரிக்கை வெற்றிகரமாகச் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால், செயல் - Action நெடுவரிசையில் "தொடரவும் - Continue" மற்றும் "நீக்கவும் - Delete" ஆகிய இரண்டு காண்பிக்கப்படும்.




- கோரிக்கையைச் சமர்ப்பித்த பின்னர், உங்கள் கோரிக்கை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவால் (TRCSL) ஆல் பெறப்பட்டதை உறுதிப்படுத்தும் மின்னஞ்சலைப் பெறுவீர்கள்.



ECS-CCL-I-20260909-001 Custom Clearance Request

Dear Applicant,

We have received your Custom Clearance request.
Reference Number: ECS-CCL-I-20260909-001.

The request is in progress, and we will update you once the process advances and 2026-09-23 and the completion date is 2026-09-23 and tracking of the request available via https://www.ecs.trc.gov.lk.

This response is automatically generated by the Equipment Clearance System of TRCSL. Please do not reply.

Best regards,
**Equipment Clearance System Team.**

### 6.2. தடுத்து வைக்கப்பட்ட தொடர் எண் சாதனங்கள்

- பிரிவு 4.1 இல் "தடுத்து வைக்கப்பட்ட சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) சாதனங்கள் - **Detained IMEI Devices**" என்பதன் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அதே படிமுறைகளைப் பின்பற்றவும்.

### 6.3. தடுத்து வைக்கப்படாத சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் சாதனங்கள்

- பிரிவு 4.1 இல் "தடுத்து வைக்கப்பட்ட சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் (IMEI) சாதனங்கள் - **Detained IMEI Devices**" என்பதன் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அதே படிமுறைகளைப் பின்பற்றவும்.

## 7. மறு-ஏற்றுமதி விண்ணப்ப செயல்முறை

படிமுறை 1: மறு-ஏற்றுமதி (Re-Export) பிரிவை அணுகுதல்

- இடதுபுற வழிசெலுத்தல் பட்டியலில் உள்ள "மறு-ஏற்றுமதி - Re-Export" பிரிவிற்குச் செல்லவும்.
- "மறு-ஏற்றுமதி - Re-Export" பிரிவைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைக்கு நீங்கள் செல்வீர்கள்.
- கீழே காட்டப்பட்டுள்ள பக்கத்தில், காட்டப்பட்டுள்ள "புதியதைச் சேர்க்கவும் - Add New" பொத்தானைக் கிளிக் செய்யவும்.




- முதல் பிரிவில் உங்களது தனிப்பட்ட விவரங்களைப் பார்வையிடலாம்.
- கீழ்நோக்கி சென்று, விண்ணப்பப்படிவத்தில் தேவையான தகவல்களை இட்டு பூர்த்தி செய்யவும்.



படிமுறை **2: விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்தல்.**

- கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி,
- “வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணம் (RTTE) விபரங்கள் - Details of RTTE” பிரிவில், சாதனத்தின் சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் நிலையாக “சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் உடன் - With IMEI” அல்லது “சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் இல்லாமல் - Without IMEI” என்பதில் பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்கவும்.
- மாதிரி சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண் CSV கோப்பு அல்லது மாதிரி தொடர் எண் CSV கோப்புகளைப் பதிவிறக்கம் செய்து, அதில் சரியான விவரங்களைப் பூர்த்தி செய்து கோப்பைச் சேமிக்கவும். தரவுகளை உள்ளடக்கிய Excel கோப்பைச் சேமிப்பின், அதனை CSV UTF-8 வடிவில் சேமிப்பதை உறுதிப்படுத்தவும்.




- “கோப்பைத் தேர்ந்தெடுக்கவும் - Choose File” பொத்தானைக் கிளிக் செய்து, உங்கள் கணினியிலிருந்து வானொலி மற்றும் தொலைத்தொடர்பு முனைய உபகரணம் (RTTE) தொடர் எண்கள் அல்லது சர்வதேச அலைபேசி உபகரண அடையாள எண்களின் பட்டியலைக் கொண்ட CSV கோப்பைத் தேர்ந்தெடுக்கவும்.



- அதன் பின்னர், கீழே காட்டப்பட்டுள்ள திரையில் உள்ள "Declaration" (உறுதிமொழி) பிரிவின் கீழ், "மேற்கண்ட உறுதிமொழியை நான் இதன் மூலம் ஏற்றுக்கொள்கிறேன் - I hereby accept the above declaration" எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிக்கு அருகிலுள்ள Tick Box-ஐத் தேர்ந்தெடுக்கவும். அந்தப் பெட்டியைத் தேர்ந்தெடுத்த பின்னர், "திகதி - Date" குறிப்பிடப்படும் புலத்தில் தற்போதைய திகதி தானாகவே தோன்றும்.
- "துணை ஆவணங்கள் - Supporting Documentations" பிரிவின் கீழ், உங்கள் கணினியில் சேமிக்கப்பட்டுள்ள தொடர்புடைய ஆவணங்களைப் பதிவேற்றுவதற்கு, உரிய பிரிவுகளில் உள்ள "கோப்பைத் தேர்ந்தெடுக்கவும் - Choose File" என்பதைக் கிளிக் செய்து, தேவையான துணை ஆவணங்களைச் சேர்க்கவும்.




- அதன் பின்னர், கோப்பை -File இணைத்த பிறகு, **"Submit"** பொத்தானைக் கிளிக் செய்து கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர், கோரிக்கையை உறுதிப்படுத்துவதற்கான உறுதிப்படுத்தல் சாளரம் தோன்றும். கோரிக்கையை உறுதிப்படுத்த **"Yes"** என்பதைக் கிளிக் செய்ய வேண்டும்.



- கோரிக்கைப் படிவத்தைச் சமர்ப்பித்த பின்னர், உங்களுக்கு ஒரு உறுதிப்படுத்தல் பக்கம் (Confirmation Page) காண்பிக்கப்படும். அந்தப் பக்கத்தில் உள்ள நீல நிற "உங்கள் நிலையைச் சரிபார்க்கவும் - Check Your Status" பொத்தானைக் கிளிக் செய்வதன் மூலம், கீழே காட்டப்பட்டுள்ள திரைகளைப் போன்று நீங்கள் சமர்ப்பித்த கோரிக்கையின் நிலையைச் சரிபார்க்கலாம். மேலும், "மறு-ஏற்றுமதி - Re-Export" பகுதிக்குச் செல்வதன் மூலமும் தொடர்புடைய கோரிக்கைகளைப் பார்க்கலாம்.
- கோரிக்கையைச் சமர்ப்பித்த பின்னர், உங்கள் கோரிக்கை இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவினால் (TRCSL) வெற்றிகரமாகப் பெறப்பட்டுள்ளதை உறுதிப்படுத்தும் மின்னஞ்சல் ஒன்று உங்களுக்கு கிடைக்கும்.